TAMIL NADU LEGISLATURE LIBRARY
12 APR 1978
MADRAS

தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

—

வியாழக்கிழமை, 1978 மார்ச் 16.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10-30 மணியளவில் மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

Ramanathapuram district.

* 175 *Q.*—THIRU V. THANGAPANDIAN: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the District Development Councils have passed and sent any resolution that the Ramanathapuram district be bifurcated into two revenue districts; and

(*b*) if so, the action taken thereon by the Government?

இராமநாதபுரம் மாவட்டம்.

திரு. வே. தங்கப்பாண்டியன்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தை இரண்டு வருவாய் மாவட்டங்களாகப் பிரிக்க வேண்டுமென்று மாவட்ட வளர்ச்சி மன்றக் குழுக்கள் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியுள்ளனவா?

(இ) ஆம் எனில், அரசு அதன் மீது எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: (அ) 1973-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 23-ந் தேதியன்று நடைபெற்ற மேற்கு இராமநாதபுரம் மாவட்ட அபிவிருத்தி மன்றக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் எண் 13-ல் ஏற்கனவே 27—6—1973-ந் தேதியன்று நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட 10-ம் நம்பர் தீர்மானத்தின்படி அருப்புக்கோட்டை தாலுக்காவையும்,

திருச்சுழி துணை தாலுக்காவையும் இணைத்து ஒரு புதிய வருவாய்க் கோட்டத்தை உடனடியாக ஏற்படுத்தி, இந்த வருவாய்க் கோட்டத்தையும் சிவகாசி வருவாய்க் கோட்டத்தையும் இணைத்து மேற்கு இராமநாதபுரம் மாவட்டம் என்று பிரிக்கும்படி தமிழக அரசைக் கேட்டுக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது.

(இ) இராமநாதபுரம் மாவட்டத்தை இரண்டாகப் பிரிப்பது சம்பந்தமாக நிர்வாகச் சீர்திருத்தக் குழு அனுப்பிய அறிக்கையும் மற்ற கோரிக்கைகளும் அரசின் பரிசீலனையில் உள்ளன.

திரு. வே. தங்கப்பாண்டியன் : துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி பல முறை மேலவையிலும் பேரவையிலும் எழுப்பப்படுகிறது. அந்த அளவுக்கு ஒரு ஜீவாதார மானப் பிரச்சினையாக இது இருக்கிறது. வசதியும் நீண்ட நிலப்பரப்பும் கொண்ட மேற்கு முகவை மாவட்டத்தைப் பிரிக்க வேண்டுமென்று மாண்புமிகு நிதியமைச்சரிடம் சொல்வதற்குக் காரணம் அவர் கையில் வருவாயும் நிதியும் இருக்கிறது. மேற்கு முகவை மாவட்டத்தைச் சேர்ந்த உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இந்தக் கருத்தைச் சட்ட மன்றத்தில் வலியுறுத்திப் பேசியிருக்கிறார்கள். விரைவில் மேற்கு முகவை மாவட்டம் என்பதை ஏற்படுத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா, அதற்கான செயற்குறிப்பு இருக்கிறதா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : கேள்வியிலேயே பதில் சொல்லியிருக்கிறேன். இந்த அரசின் பரிசீலனையில் மற்ற கோரிக்கைகள் உள்ளன.

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் : தமிழகத்தில் உள்ள ஜில்லாக்களைப் பிரிப்பது ஒவ்வொருவருக்கும் அவர்களுடைய கொள்கையாகவே ஆகிவிட்டது. மேலும் இந்த இராமநாதபுரம் ஜில்லாவில் ரொம்ப வறட்சியால் வாடக் கூடிய பகுதி கிழக்கு இராமநாதபுரம் என்பது நிதி அமைச்சருக்கும் மற்ற அமைச்சர்களுக்கும் நன்றாகத் தெரியும். நான் ஆதார பூர்வமாகச் சொல்கிறேன். பண்டைய காலம் தொட்டு அந்தப் பகுதியில் உள்ள தொண்டி என்ற ஊரில் துறைமுகம் ஏற்பட்டு வெளிநாடுகளுக்கெல்லாம் அங்கிருந்து கப்பல் போக்கு வரத்து நடந்திருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : ஆகவே அதை ஏற்படுத்தலாம் என்று விரும்புகிறீர்கள், அவ்வளவுதானே ?

சட்டமன்றம் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1978 மார்ச் 16]

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் : நான் விரும்புவது மட்டுமல்ல. அது சிலப்பதிகாரத்தில் இடம் பெற்ற துறைமுகம் என்பது தலைவர் அவர்களுக்கும் தெரியும்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அதனால் அதுபற்றிச் சொற்பொழிவு ஆற்ற வேண்டுமா ?

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் : அந்தத் துறைமுகம் நமக்கு ரொம்ப முக்கியம். ஒரு ஜில்லாவுக்கு ஒரு துறைமுகம் இருந்தால், அந்த இடம் ஜில்லாத் தலைநகரமாக இருந்தால், அது போற்றத் தகுந்ததாக இருக்கும் என்பதை எல்லோரும் அறிவார்கள். உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் இது நன்றாகத் தெரியும். மற்ற அமைச்சர்களுக்கும் நன்றாகத் தெரியும். ஆகையால் தொண்டியை கிழக்கு இராமநாதபுரத்தின் தலைநகரமாக ஆக்குவதைப் பற்றி நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தொண்டியைப் பற்றியும் கிழக்கு இராமநாதபுரத்தின் வரலாற்றுச் சிறப்பைப் பற்றியும் விளக்கமாகக் கூறிய திரு. தேவர் அவர்களுக்கு நன்றி சொல்லி நான் விடை பெறுகிறேன். (சிரிப்பு)

திரு. ஆற்காடு நா. வீராசாமி : இராமநாதபுரம் மாவட்டத்தை இரண்டு வருவாய் மாவட்டங்களாகப் பிரிக்கிற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருப்பதாக நிதியமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஏற்கெனவே இராமநாதபுரம் மாவட்டத்தின் தலைநகரம் மதுரையில் இருக்கிறது. அது சிவகங்கையில் இருக்க வேண்டுமென்று சிலரும் இராமநாதபுரத்திலேயே இருக்க வேண்டுமென்று பலரும் கோரிக்கை விடுத்து, அந்தப் பிரச்சினை நீண்டகாலமாக இருக்கிறது. அந்த வேண்டுகோள்கள் இன்னும் பரிசீலனை செய்யப்படவில்லை. மதுரையில் உள்ள இராமநாதபுரம் மாவட்டத்தின் தலைமை இடத்தை வேறு இடத்தில் அமைக்க அரசாங்கம் முடிவு எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் கேட்ட கேள்விக்கு நான் சில குறிப்புகளைத் தர விரும்புகிறேன். இந்த மாவட்டம் திருப்பத்தூர், திருவாடானை, சிவகங்கை, பரமக்குடி, முதுகுளத்தூர், இராமநாதபுரம் ஆகிய வட்டங்களைக் கொண்டதாக இருக்கும். இது நான் குறிப்பிடுவது அல்ல. நிர்வாகச் சீர்திருத்தக் குழு அதனுடைய சிறப்பு அறிக்கையில் பரிந்துரை செய்தது. இதன் தலைநகரத்தைப்பற்றி ஒப்பிட்டு, பெருமளவில் மேம்பாடடைந்த மானாமதுரை, சிவகங்கை ஆகியவற்றினை உருவாக்க வேண்டியிருக்கும். மாவட்டத்தின் மற்ற பகுதியிலிருந்து நல்ல சாலை வசதி, ரயில் வசதி இருப்பதால், இந்தப் பகுதி அந்த மாவட்டத்

தின் தலைநகரம் இடமாவதற்குச் சிறந்த இடமாக இருக்கும். தேவையான தண்ணீரை வைகை ஆற்றிலிருந்து எடுக்கலாம். சிவகங்கைக்கும் மாஞ மதுரைக்கும் தொலைவு 10 மைல் என்பதால், புதிய தலைமை இடமாக இரண்டு நகரங்களும் காலப்போக்கில் பரந்த நகரமாக மனப்பாங்கு பெறும். 7,632 சதுர கிலோ மீட்டர் பரப்பும் 17.48 லட்சம் மக்களைக் கொண்டதாகவும் 21 ஊராட்சி ஒன்றியங்களைக் கொண்டதாகவும் அமையும். இராமநாதபுரம் நகரம் எந்த முக்கியத்துவமும் இல்லாத ஒன்று. நான் சொல்லவில்லை. பரிந் துரைதான் அது. மேலும் ஜமீன் ஒழிப்பிற்குப் பின்னல் அந்தப் பகுதியில் எந்தச் சிறப்பும் இல்லை. கன்னியாகுமரி மாவட்டத்தைப் போல புகழ்பெற்ற புண்ணிய ஸ்தலம் என்பதால் இராமேஸ்வரம் என்று பெயரிடுவது பொருத்த முடையது. இராமநாதபுரம் என்று பெயர் வைக்கக் கூடாது என்று சிலரும் சிவகங்கை மகாராஜா இருந்த காரணத்தால் அந்த வரலாற்றுச் சிறப்பின் அடிப் படையில் இராமநாதபுரம் என்று பெயர் வைக்க வேண்டுமென்று சிலரும் இப்படி இந்தக் கோரிக்கை வளர்ந்து அரசியல் கட்சிகளிடையே ஏற்படுகிற கோரிக்கையாக உருப்பெற்றுவிடக்கூடாது என்ற அச்சம் அரசிற்கு இருக் கிறது. ஆகவே இது குறித்து முடிவு எடுப்பதற்கு முன்பு அங்குள்ள மக்களின் கருத்துக்களை, அரசியல் கட்சிகளின் கருத்துக்களை, அந்த ஊரிலுள்ள பெரியவர் களின் கருத்துக்களை அறிய வேண்டியிருக்கிறது. இது உணர்வு பூர்வமான பிரச்சினை என்பதனுல் சொல்கிறேன், அவற்றை அறிந்து தெரிந்ததற்குப் பிறகு, பெயர் வைப்பதில் அரசு முடிவு செய்யும். அவசரப்பட்டு எங்களை இதில் இறங்கி விடுவதற்கு திரு. வீராசாமி அவர்கள் தூண்டக்கூடாது.

House Rent Allowance and City Compensatory Allowance.

* 176 *Q.*—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether it is fact that Therkutheru village comes within the Madurai City limits for the purposes of House Rent Allowance and City Compensatory Allowance; and

(*b*) if so, the reasons for not making payment of these allowances to the Government school teachers and Government employees residing in that village?

வீட்டு வாடகைப் படி, நகர ஈட்டுப் படி.

திரு. பி. ஆர். தாமஸ்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விஞக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி ஆகியவை வழங்கப் பெறத் தகுதி உள்ளதாகும் வகையில், தெற்குத் தெரு கிராமம், மதுரை மாநகர எல்லைக்குள் வருகின்றது என்பது உண்மையா?